# மெட்ரோ ரயிலில் இலவச பயணம்

**சென்னை, ஜூன் 6–**

பள்ளி மாணவ – மாணவியர், மெட்ரோ ரயில் தொழில்நுட்பத்தை தெரிந்து கொள்ள, இலவசமாக, மெட்ரோ ரயிலில் அழைத்து செல்லப்படுகின்றனர்.

வேளச்சேரி, அரசு உயர்நிலை பள்ளி மாணவ – மாணவியர், 300 பேர், நேற்று முன்தினம், மெட்ரோ ரயிலில், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப்பேட்டை வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

மெட்ரோ ரயில் அதிகாரிகள், நவீன தொழில்நுட்பம், நிலைய வசதிகள், பாதுகாப்பு குறித்து தெரிவித்தனர். இதுவரை, 31 ஆயிரத்து, 178 மாணவ – மாணவியர் இலவசமாக, மெட்ரோவில் பயணித்துள்ளனர்.